செய்தி வெளியீடு எண். 420 நாள். 10.07.2007

## மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின் தமிழக இலக்கியச் சுற்றுலா

2007 ஆம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் மாதங்களில் மலேசியாவிலிருந்து 34 பேர்கள் கொண்ட தமிழ் எழுத்தாளர்கள் குழு, 16 நாட்கள் தமிழ்நாட்டில் இலக்கியச் சுற்றுலா மேற்கொள்கின்றனர். இவர்கள், சென்னை வந்தடைந்து, புதுவை, சிதம்பரம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி, பழனி, பொள்ளாச்சி, கோவை மற்றும் ஏற்காடு ஆகிய இடங்களுக்கு சென்று தமிழ் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் மற்றும் அது தொடர்பான நினைவுச் சின்னங்களை பார்வையிட்டு, நான்கு பல்கலைக்கழகங்களில், மலேசிய தமிழ் இலக்கியக் கருத்தரங்குகள் நடத்த திட்டமிட்டுள்ளனர்.

இவர்களது தமிழகப் பயணம் மற்றும் கருத்தரங்குகள் சிறப்புடன் நடத்துவது குறித்து, இன்று (10.7.2007) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு பரிதி இளம்வழுதி அவர்களின் தலைமையில், கவிஞர் திரு வைரமுத்து அவர்களின் முன்னிலையில், சம்பந்தப்பட்ட அரசுச் செயலர்கள் மற்றும் துறைத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டது.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9/